Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"The unified voice of Canadian Tamils"

Head Office:
Toronto
216-31 Progress Ave.
Toronto, On. M1P 4S6 Canada
Tel: 416 240 0078
Fax: 416 240 1601

Branch Office:
Montreal
378-6830, Parc Ave.
Montreal, Qc H3N 1W3
Tel: 514 394 7727
Fax: 514 227 5477

www.canadiantamilcongress.ca info@canadiantamilcongress.ca

தாமதமற்ற வழங்கலுக்கு:

## தமிழர் உரிமைகளுக்கான விழிப்புணர்வுப் பரப்புரைச் செயற்பாட்டை இலங்கையின் சுதந்திர தினத்தன்று தமிழர் மேலும் தீவிரப்படுத்துகின்றனர்

சனவரி 28, 2010
ரொறன்ரோ, ஒன்ராறியோ

கனடியத் தமிழர் பெப்பிரவரி 4ஆம் நாள் 2010ஆம் ஆண்டு சிறி லங்காவிற் தொடரும் மனித உரிமை மீறல்களுக்கு எதிரான போராட்டங்களையும் பரப்புரைகளையும் மேலும் தீவிரப்படுத்த உள்ளனர். இவ் எதிர்ப்பு நிகழ்வுகள் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வரும் ‘தமிழர் உரிமைகளுக்கான விழிப்புணர்வுப் பரப்புரைச்’ செயற்பாட்டின் ஓர் அங்கமாக இலங்கையின் 62வது சுதந்திர தினத்தன்று இடம்பெறவுள்ளது. சிறி லங்காவில் இந்நாள் ஒரு விழாவாக இருந்த போதும் தமிழரைப் பொறுத்தவரை அவர்களின் உரிமைகள் சொந்த மண்ணிலேயே பறிக்கப்பட்ட கறுப்பு நாளாகும். இவற்றை மனதிற் கொண்டு சிறி லங்காவின் பொருட்களையும் சேவைகளையும் புறக்கணிக்குமாறு தமிழ்க் கனடியர்கள் பாவனையாளரைக் கேட்டுக் கொள்கின்றனர்.

சிறி லங்காவின் மக்கட் தொகையில் 18 சதவீதமான தமிழர்கள் 60 ஆண்டுகளுக்கும் மேலாகத் திட்டமிட்ட படுகொலைகளுக்கும் தரப்படுத்தலுக்கும் பாகுபாடான நடத்தல்களுக்கும் புறக்கணிப்புக்கும் ஆளாகி வருகிறார்கள். கடந்த ஆண்டில் மட்டும் 20 000கும் அதிகமான தமிழரைப் படுகொலை செய்தும் 300 000க்கும் அதிகமானோரை வதை முகாம்களில் அடைத்தும் அப்பாவித் தமிழர் மீது மனித உரிமை மீறல்களை திட்டமிட்டு மேற்கொண்டது சிறி லங்கா அரசு. தமிழர் காணாமற் போதலும் துன்புறுத்தப்படுதலும் அங்கே தொடர்ந்தும் சாதாரண நிகழ்வுகளாக இருந்து வருகின்றன.

இச் செயற்பாட்டின் ஓர் நிகழ்வாக பெப்பிரவரி மாதம் 4ஆம் நாள் 2010ஆம் ஆண்டு மாலை 4:30 மணி தொடக்கம் மாலை 7:30 மணிவரை 40 சென் கிளயர் அவனியு, ரொறன்ரோ, ஒன்ராறியோவில் அமைந்துள்ள சிறி லங்காத் துணைத் தூதரகம் முன்பாக எதிர்ப்புப் போராட்டமும் கவனயீர்ப்பும் இடம்பெறும். அத்துடன் ‘கப்’ நிறுவனம் உட்பட்ட சிறி லங்காவின் பொருட்களையும் சேவைகளையும் சந்தைப்படுத்தும் பல நிறுவனங்கள் முன்பாகவும் எதிர்ப்புப் போராட்டம் இடம்பெறும். இந் நிகழ்விற் கலந்து கொள்வோர் 62 ஆண்டுகால சிறி லங்கா அரசின் தமிழர் மீதான வன்முறைகளையும் அடிமைப் படுத்தலையும் தமிழரின் சுயநிர்ணய உரிமையின் அவசியத்தையும் பிரதிபலிப்பர்.

இந் நிகழ்வுகளின் பேச்சாளர் செயகோபி செயரட்ணம் கருத்துத் தெரிவிக்கையில் உலகெங்கும் பரந்து வாழும் தமிழர், ஈழத் தமிழர் மீது சிறி லங்கா தொடரும் மனித உரிமை மீறல்களை இந்நாளிலும் வெளிப்படுத்த விளைகிறார்கள் என்றார். “தமிழீழத்தில் வாழும் தமிழர் இன்றும் அச்சத்துடன் வாழ்வதோடு உரிமைகள் அனைத்தும் பறிக்கப்பட்டு அடிமைப் படுத்தப்பட்ட நிலையில் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்த முடியாதவராக ஊடகங்களோடு கூடப் பேசப் பயந்த நிலையில் இருக்கின்றனர். 62 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கைத் தீவின் இரண்டாந்தர மக்களானோம். எமக்கு நம் உரிமைகள் மீண்டும் வேண்டும்” என அவர் மேலும் தெரிவித்தார்.

கூடிய விபரங்களுக்கு: செயகோபி செயரட்ணம் 416 240 0078